**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.105/2018**

2026—ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.3 பிச்சாண்டி வயது 62, த/பெ சின்னகுழந்தை**

**நேரம் -12.05**

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றாலும், எனக்கு படிக்க தெரியுமா என்றால் படித்து சொன்னார்கள். எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொல்லி தயார் செய்தார்கள் என்றாலும், தயார் செய்யும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை, விவரங்களை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது, நான் எதுவும் சொல்லவில்லை. 1ம் பிரதிவாதி அண்ணாமலையை எனக்கு தெரியுமா என்றாலும், அவர் வயதானவர் என்றால் தெரியும், சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 62 வயதாகிறது.

2. 1ம் பிரதிவாதி என்னை விட மூத்தவர் என்றால் சரிதான், சுமார் 5 முதல் 10 வருடங்கள் பெரியவர். அவர் சிறு வயதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சம்பாதித்த சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் 1ம் பிரதிவாதியின் தந்தையின் சொத்தாகும். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் என்ன என்றால் ராமசந்திரன். சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்று ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. சொத்து விவரங்களை பற்றி எனக்கு தெரியுமா என்றாலும், எவ்வளவு ஏக்கர் விஸ்தீரணம், பட்டா எண் தெரியுமா என்றால் விஸ்தீரணம் 6 ஏக்கர், பட்டா எண்.106/6 ஆகும், ராமசந்திரன் பெயரில் பட்டா உள்ளது.

3. மேற்படி 6 ஏக்கரில் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் வாதி செந்தில்குமார் பயிர் செய்து வருகிறார். அண்ணாமலை செந்தில்குமார் பெயரில் சொத்து ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அண்ணாமலை என்பவர் சொத்து

ஏதேனும் விற்பனை செய்தாரா என்றால் அவா தங்கைக்கு கொஞ்சம் சொத்தை விற்றார், எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அண்ணாமலை வேறு யாருக்கும் சொத்துக்களை விற்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அண்ணாமலை, ராணி, ரம்யா, தேவி, பிரதீப் ஆகியோர் மீது செந்தில்குமார் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4. எந்த வருடம் வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எந்த வருடம் என்று எனக்கு தெரியாது, ஆனால் 2 வருடத்திற்கு முன்புதான் தாக்கல் செய்தார். எதற்காக வாதி பிரதிவாதிகள் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வேர்க்கடலை பயிர் செய்ததை பிரதிவாதிகள் எடுத்து சென்றதால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விவரங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதியும் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான், வாதிக்கு திருமணம் ஆன பிறகு 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதியும் தனியாக வசித்து வருகிறார்கள்.

5. 1ம் பிரதிவாதிக்கு ஜீவனம் எப்படி என்றால் கூலி வேலை செய்கிறார். அண்ணாமலைக்கு சொத்து ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது, எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அண்ணாமலை வேர்க்கடலை பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுயமாக சம்பாதித்த சொத்தில்தான் பயிர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, அவர் தந்தையின் சொத்தில்தான் பயிர் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி வாதிக்கு சொத்து எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் என்ன பிரச்சினை என்றால் வாதி பயிர் செய்வது 1ம் பிரதிவாதிக்கு பிர்ச்சினை ஆகும். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான், சுமார் 10 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை.

6. நான் தற்போது அளித்த சாட்சியத்தை மட்டும்தான் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும், வேறு எந்த சங்கதிகளையும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தின் அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வாதி அழைத்ததன் பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான், பக்கத்து நிலத்துக்காரா் என்ற முறையில் வந்தேன். எனக்கு இவ்வழக்கை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும், வாதி அழைத்ததன் பேரில் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் 2,3 மற்றும் 4, 5 பிரதிவாதிகளுக்கும் பொருந்தும்**

நேரம் - 12.40

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni